**செ. கு. எண்: 150** **நாள்: 13.12.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.ஓ.பன்னீர்செல்வம்** அவர்களின்
அறிக்கை - 13.12.2016

'வர்தா' புயல் சென்னை அருகே கரையைக் கடக்கக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் **10.12.2016** அன்று அறிவிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து, பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. இதன் காரணமாக, சுமார் **130** கி.மீ. வேகத்தில் 'வர்தா' புயல் சென்னை துறைமுகம் அருகே கரையைக் கடந்த போதும், உயிர் சேதங்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டன. பொருள் சேதங்களும் குறைக்கப்பட்டன. எனினும், புயல் சென்னையில் கரையைக் கடந்ததனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை விரைந்து சீர் செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'வர்தா' புயல் காரணமாக, தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாமல் இருக்க அவர்கள்

பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு 104 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த முகாம்களில் 13,578 பேர்கள் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

'வர்தா' புயல் காரணமாக ஏற்பட்ட சேதங்களை சீர் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று (13.12.2016) காலை தலைமைச் செயலகத்தில் மூத்த அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், அரசு ஆலோசகர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் ஆகியோருடன் நான் விவாதித்தேன். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் சீர் நடவடிக்கைகளை பல்வேறு அரசு துறைகளும் ஒருங்கிணைந்து விரைந்து செயல்பட ஏதுவாக, 15 மண்டலங்களிலும் மண்டலத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் பல்துறை அதிகாரிகள் அடங்கிய குழு அமைக்க நான் உத்தரவிட்டு அதன் அடிப்படையில் அவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்களில் சென்னை மாநகராட்சி, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை,

காவல் துறை, வருவாய் துறை, சுகாதாரத் துறை மற்றும் மின்சாரத் துறை சார்ந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் அறிவுரைகளின்படி இந்த குழுக்கள் விரைந்து சீர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

'வர்தா' புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மின்சார சேவை பாதிக்கப்பட்டுள்ளன. 450 மின்மாற்றிகள் (Transformers) சேதமடைந்துள்ளன. மூன்று 230 KVA மின் கடத்தி கோபுரங்கள் சேதமடைந்துள்ளன. 10,000 மின் கம்பங்கள் சேதமடைந்துள்ளன. மரங்கள் சாய்ந்து விழுந்ததனால் சேதமடைந்த மின்மாற்றிகள் மற்றும் மின் கம்பங்களை சீர் செய்யும் வகையில் மரங்களை அகற்றும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்மாற்றிகள் மற்றும் மின் கம்பங்களை மாற்றியமைக்கும் பணிகளை மேற்கொள்ள 9,000 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சென்னை நகரில் ஒரு சில இடங்களில்

மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது எடுக்கப்பட்டு வரும் போர்க்கால நடவடிக்கைகளின் காரணமாக, சென்னையில் அநேக இடங்களில் இன்று இரவுக்குள் மின் விநியோகம் சீர் செய்யப்பட்டு விடும். எனினும், பெருநகர சென்னையின் புறநகர் பகுதிகள், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் புதிய மின் கம்பங்கள் நிறுவப்பட்டு, அதன் பிறகே மின் விநியோகம் சீர் செய்ய முடியும் என்பதால் ஓரிரண்டு நாட்களில் முழுவதுமாக சீர் செய்ய நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

சென்னை மாநகர எல்லைக்குள், நெடுஞ்சாலைத் துறையை சார்ந்த அண்ணாசாலை, வடபழனி உள்வட்ட சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை உள்ளிட்ட 252 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் புயல் காரணமாக விழுந்துள்ள 1,596 மரங்களில், 1,350 மரங்கள் மின் ரம்பங்கள் மூலம் வெட்டப்பட்டு சாலை ஓரங்களில் தள்ளி வைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இடையூறற்ற போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து மரங்களை

சாலைகளிலிருந்து அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. கோவை, திருப்பூர், திருச்சி வட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் மற்றும் இதர பொறியியல் பணியாளர்களுடன் 131 JCB இயந்திரங்கள், 117 மரம் அறுக்கும் இயந்திரங்கள், 40 லாரிகள் மற்றும் 1,200 பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு இது தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது.

'வர்தா' புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 12,000-க்கும் மேற்பட்ட மரங்கள் வேருடன் சாய்ந்து சாலைகளில் விழுந்துள்ளன. பேருந்து போக்குவரத்து சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விழுந்துள்ள மரங்களை மின் ரம்பங்கள் மூலம் வெட்டி, சாலை ஓரங்களில் வைக்கும்பணி மேற்கொள்ளப்பட்டு, போக்குவரத்து சீர்செய்யப்பட்டுள்ளது. மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும் பணியில் 275 மின் ரம்பங்கள் பயன்படுத்தப்பட்டு, 100க்கும் மேற்பட்ட JCB இயந்திரங்கள் 8,400 பணியாளர்கள் இப்பணியில் தொடர்ந்து

ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். சுமார் 200 லாரிகள் இந்த மரங்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் வேருடன் சாய்ந்துள்ள 3,845 மரங்களில் 1,974 மரங்கள் சாலையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. விரைந்து இந்த மரங்கள் அப்புறப்படுத்தும் வகையில் சுமார் 200 லாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், 200 லாரிகள் இப்பணியில் ஈடுபடுத்தப்படும். மண்டலங்களில் உள்ள காலியிடங்களில் இவை முதலில் அப்புறப்படுத்தப்பட்டு, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய குப்பை கொட்டும் இடங்களுக்கு கொண்டு செல்லப்படும்.

பெருநகர சென்னை மாநகரில் குப்பைகளை அகற்றுவதற்கு வெளி மாவட்டங்களில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் 1,300 துப்புரவு பணியாளர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 500 பேர் வெளி மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 119 ஆம்புலன்ஸ் வாகனங்கள் அவசர தேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களில் 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து நிவாரண முகாம்களில் மருத்துவ உதவி முகாம்கள் தொடங்கப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

உணவு பாதுகாப்பு, குடிநீர் பாதுகாப்பு மற்றும் பூச்சிகளால் ஏற்படும் தொற்று நோய்கள் மற்றும் பாதுகாக்கப்படாத அசுத்த நீரினால் ஏற்படும் தொற்றுநோய்களுக்கென மருத்துவ சிகிச்சை வழங்க தலா 50 குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நேற்று (12.12.2016) புறகர் மற்றும் நெடுந்தூர மின் தொடர் வண்டிகள் ரத்து செய்யப்பட்டு, 33 ரயில் நிலையங்களில் ரயில்கள்

நிறுத்தப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் மூலம் உணவு, பால், தேநீர் மற்றும் குடிநீர் முதலியன வழங்கப்பட்டன. ரயில் நிலையங்களில் உள்ள பயணிகள் அவர்களது ஊர்களுக்கு சென்றடைய பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. சுமார் 18,000 பயணிகள் 150 பேருந்துகள் மூலம் பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பெருநகர சென்னைப் பகுதியில் ஆவின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 11 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது. இதில் பால்கார்டுதாரர்களுக்கு 7.5 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது. இன்று (13.12.2016) காலை பால் கார்டுதாரர்களுக்கு எவ்வித தடையுமின்றி 7.5 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டது. மொத்த பால் விற்பனையாளர்களுக்கு 1.5 லட்சம் லிட்டர் பால் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட பால் பண்ணைகளிலிருந்து பாக்கெட் பால் கொண்டு வரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, எந்தவித தங்குதடையின்றி

முழுமையான பால் விநியோகம் ஆவின் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'வர்தா' புயல் காரணமாக **16** பேர் உயிரிழந்துள்ளனர். **1,388** குடிசைகள் முழுமையாகவும் **5,739** குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்த **16** நபர்களின் குடும்பங்களுக்கு தலா **4** லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். சேதமடைந்த குடிசைகளுக்கு நிவாரணம் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

நேற்று (12-12-2016) வர்தா புயல் காரணமாக பாதிக்கப்பட்டு சென்னை எண்ணூர் கத்திவாக்கம் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த தாளாங்குப்பம்-நெட்டுகுப்பம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த பொது மக்களையும், இன்று (13-12-2016) திருவள்ளூர் மாவட்டம் மாத்தூர் அரசு உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த பாலசுப்பிரமணியன்

நகர் பொது மக்களையும் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தீபம் கல்யாண மண்டபத்தில் உள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கும் பொது மக்களை நேரில் சந்தித்து 10 கிலோ அரிசி, வேட்டி, புடவை, போர்வை , ரொட்டி பிஸ்கட் மற்றும் குடிநீர் ஆகியவற்றை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினேன்.

மேலும் பழவேற்காடு பகுதிகளில் உள்ள கூணன்குப்பம், திருமலைநகர் குப்பம், செம்பாசிபள்ளிகுப்பம், லைட் அவுஸ் குப்பம், லைட் அவுஸ் நடு குப்பம், அரங்கன்குப்பம், வைரவன் குப்பம், பள்ளி குப்பம், பேட்டை குப்பம், கரிமணல், நக்கத்துரவு, சாத்தாங்குப்பம், பசியாவரம், ரகமத் நகர், இடமணி குப்பம், இடமணி காலணி, நடுவூர் மாதா குப்பம், தோணிரேவு, ஜமீலா பாத், அம்பேத்கார் நகர், செஞ்சிஅம்மன் நகர், எம்.ஜி.ஆர் நகர், கோட்டைகுப்பம், ஆண்டிகுப்பம், ஆகிய இடங்களைச் சார்ந்த மீனவ பிரதிநிதிகளை நேரில் சந்தித்து படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளின் சேதங்கள் குறித்து கருத்து கேட்டறிந்து ஆறுதல் கூறி, உடனடியாக நிவாரண பணிகளை விரைவுபடுத்த உத்தரவிட்டேன். மேலும் பழவேற்காடு செல்லும் வழியில்

ஜமீலாபாத் நடுவூர் மாதா குப்பம், தோனிரேவு, கோளாச்சியம்மன் கோயில் குப்பம், பாக்கம், அவுரிவாக்கம் ஆகிய இடங்களில் கூடியிருந்த பொதுமக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினேன். பின்னர், பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் -IV, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர், நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், மாவட்ட வருவாய் அலுவலர், உதவி ஆட்சியர் (பயிற்சி), திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பொன்னேரி சார் ஆட்சியர், மற்றும் நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, பள்ளி கல்வித் துறை, மீன் வளத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளைச் சார்ந்த அதிகாரிகளுடன் விரிவான ஆய்வு மேற்கொண்டு நிவாரணம் மற்றும் மறு சீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஓ.பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**